விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 10 ரம்ழா 2 இதழ் 102
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-5-1985


## இன்றைய யுத்தநிலையில் இருதரப்பு பேச்சுக்கு இடமில்லை! — ஜனாதிபதி

[கொழும்பு]
"தற்போதைய யுத்த நிலையில் இருதரப்பு பேச்சு வார்த்தை என்பதற்கு இடமில்லை" என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன குணசிங்கபுரவில் நேற்று நடைபெற்ற பொதுவைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'ஒரு பக்கம் பயங்கரவாதமும், மறுபக்கம் அரசாங்கமுமே இன்றையநிலை. இந்த நிலைமையில் மத்தியஸ்தம் என்று ஒன்று இருக்க முடியாது. அரசியல் நோக்கில் ஒருவர் மதில்மேல் பூனையாக இருப்பது சாத்தியப்படாது" என்றும் தெரிவித்தார். (ரா)

## ஜனாதிபதி தொண்டா சந்திப்பு

(கொழும்பு)
ஜனாதிபதியை நேற்று சந்தித்த அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் செட்டிக்குளத்திலிருந்து தமிழ்மக்கள் வெளியேற்றப்படுவது குறித்து நீண்டநேரம் உரையாடினார்.

[-5ம் பக்கம் பார்க்க]

## சி. ஐ. டி. விசாரணையில் பிரஜைகள் குழு தலைவர்

(கல்முனை)
பிரஜைகள் குழு ஒன்றின் தலைவர், இரகசியப்பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

அண்மையில், கிழக்கு மாகாணத்தில் சுமார் 40 தமிழ் இளைஞர்கள் கொலைசெய்யப்பட்டது தொடர்பாக செய்திகள் வெளிவந்தது சம்பந்தமாகவே மேற்படி தலைவர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

# இலங்கை இனப்பிரச்னை: இராணுவ தீர்வு பலனளிக்காது! ஹெய்டன் கருத்து

(பி. ராஜரட்னம்)
"இலங்கை ஆயுதப்படையினர் மத்தியில் ஒழுங்கினம் காணப்படுகிறது. இந்த உண்மையை ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவும் ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு எந்தவிதத்திலும் பரிகாரம் அளிக்காது. இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் அரசியல்தீர்வை அதிவிரைவில் காணவேண்டும்" என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. பில் ஹெய்டன் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு குறுகிய கால விஜயம் மேற்கொண்ட திரு. ஹெய்டன் நேற்று ஒபரோய் ஹோட்டலில் செய்தியாளர் மகாநாடொன்றை கூட்டினர். இச்சந்திப்பில்தான் அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

### 'அமிர்' பேச்சு பற்றி கருத்து

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் ஆஸ்திரேலியாவில் வெளி

[5ம் பக்கம் பார்க்க]

## சவூதியிலிருந்து திரும்பிய 4 இளைஞரைக் காணவில்லை

(மதவாச்சி)
சவூதி அரேபியாவிலிருந்து தாயகம் திரும்பிய நான்கு தமிழ் இளைஞர்களைக் காணவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நால்வரும் கொழும்பு திரும்பியதும் வாடகைக் காரில் ஊருக்குப் புறப்பட்ட

[6ம் பக்கம் பார்க்க]

## ஒன்பது சிறைக்கைதிகள் கடத்தப்பட்டனர்?

(கோப்பாய்)
கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த 9 சிறைக் கைகதிகள் இனந்தெரியாத கோஷ்டியினால் கடத்திச்செல்லப்பட்டதாகத்தெரியவருகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## "வன்செயல்களின் பின்னணியில் சர்வதேச பயங்கரவாதம்!" மதப் பிரதிநிதிகள் மத்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)
"நாட்டில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் இனப்பிரச்னை என்ற அடிப்படையில் இடம்பெறவில்லை. சர்வதேச பயங்கரவாதத்தின் ஒரு பணியாகவே இவை இடம் பெறுகின்றன" என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன கருத்து வெளியிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து பல்வேறு மதப்பிரதிநிதிகளை நேற்று அமைச்சரவை அலுவலகத்தில் சந்தித்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்

சுமார் ஒரு மணி நேரம் வரை இடம்பெற்ற இச்சந்திப்

[5ம் பக்கம் பார்க்க]

## அநுராதபுரம் தமிழ் அகதிகள்

(யாழ்ப்பாணம்)
அநுராதபுரத்திலிருந்து மேலும் 21 பேர் நேற்று அகதிகளாக வவனியாவந்து சேர்ந்தனர்.

அகதிகளாக வந்துள்ள 21 பேரும் ரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர். (மா)

## பாராளுமன்றம் நோக்கி பிக்குகள் ஊர்வலம்?

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னை, அநுராதபுரம் சம்பவம் ஆகியவை தொடர்பாக புத்த பிக்குகளின் ஊர்வலமொன்று இன்று பாராளுமன்றம் நோக்கி இடம்பெறலாம்

(5ம் பக்கம் பார்க்க)


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதனவருடம் வைகாசி மீ 11-ம் நாள் (24-05-85) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி முதல் 10-00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

திருநிறை செல்வன்
ஆனந்தராஜன்
(பொறியியலாளர் லண்டன்) அவர்களுக்கும்

திருநிறை செல்வி
சந்திராதேவி
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருவருள் நலங்கொண்டு திருமண வைபவம் நிகழப் பெரியார் நிச்சயித்திருடபதால் அத்தருணம் தாங்கள் சுற்றம்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி அ. முருகேசு
(இளைப்பாறிய தலைமை ஆசிரியை)
அரசடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

திரு/திருமதி இராசையா தம்பதிகள்
(இளைப்பாறிய மாவட்ட சுகாதாரபரிசோதகர்)
''ராஜபவனம்''
22, ராசவீதி, அச்சுவேலி.

(3396)


## மாணவர், ஆசிரியர் பாதிப்பு: ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)
"பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பின்மையாலும், போக்குவரத்துவசதியின்மையாலும்பாடசாலை வருவது குறைந்துள்ளதாகவும் திறமையுள்ள மாணவர் பலர் அச்சம் காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றுகொண்டிருப்பதால் மாணவர்கள் வரவு குறைந்துவருவதாகவும் வடயாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. கே அருணசலம் கவலைதெரிவித்தார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடந்த வடபகுதி அதிபர்கள் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கவலை தெரிவித்தார்.

பாதுகாப்பின்மை, போக்குவரத்து வசதியின்மை காரணமாக மாணவர்களும், ஆசிரி

(6-ம் பக்கம் பார்க்க)

## கல்வித் திணைக்களம் குண்டுவைத்துத் தகர்ப்பு!

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு கல்வித் திணைக்களம் நேற்று அதிகாலை இரண்டரை மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

இச் சம்பவத்தினால் கல்வித் திணைக்களத்தின் மாடிக்கட்டடத்தின் முழுக்கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

## "தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து சகோதரத்துவத்துடன் வாழவேண்டும்" — சரத்

(கலவானை)
"இனரீதியாக நாட்டில் எழுந்துள்ள இன்றைய துர்ப்பாக்கிய நிலையினால் பெரும்பான்மை இனத்தவராகிய எமது உரிமைகளை கட்டிக்காக்கும் அதேவேளை, சிறுபான்மை இனத்தவராகிய தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைத்து சகோதரத்துவத்துடன் வாழ சகல கட்சிகளும் ஒருமனதாக நல்ல முடிவினுக்கு வரவேண்டும்" என்று கலவானை எம். பி. திரு. சரத் முத்தேட்டுவகம கலவானைத் தொகுதியில் நடைபெற்ற பொதுவைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

(6ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லஇன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது. ச நல்லநாதன், 11/1, ஒடைலேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம், 3375

சீயாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு சேர்வையிலுள்ள சீயாக்காய் பவுடர் விற்பனைக்குண்டு பெக்கட் 5/50 தொடர்பு கொள்க. M.G.M and Stores, 777 காங்கேசன் துறை வீதி and 208 முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

வீட்டுத்தளபாடங்கள், மின் விசிறி, தையல் மெசின் விற்பனைக்குண்டு. C/o விசாகன் கோணாமலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (3387)

## தேவை

இறைச்சிக்குரிய கோழிகள் தேவை தொடர்பு கொள்ள வேண்டியஇடம்: அண்ணபாம், இணுவில் கிளை: அண்ணபாம், செம்மாதெரு, (மொஸ்கலேன்) யாழ்ப்பாணம். 3376

## வாடகைக்கு

3 படுக்கை அறைகளுடன் புதிய வீடு பைப், மின்சார வசதிகளுடன் வாடகைக்குக் கொடுக்கப்படும். கஸ்தூரியார் வீதியில் பெரியகடைக்கு அண்மையில் தொடர்பு 10, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 3356

## வகுப்புகள்

உயர்தர மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் Grammar and Spoken. கடித மூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்க. 15/4, முருகேசர் லேன், நல்லூர். 3381

## தவறிவிட்டது

19-5-85 ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்புச் சந்திக்கும், விளான் சந்திக்கும் இடையில் தனியார் வானில் பிரயாணம் செய்கையில் ரொக்கம் ரூபா 5000/- தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயைகூர்ந்து கீழ்க்காணும்விலாசத்தில்சேர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். பங்குத்தந்தை, யுவானியார் கோவில், பெரிய விளான். 3390

எனது வீட்டு திறப்பு கோர்வை செவ்வாய்க்கிழமை அன்று 180 ஆஸ்பத்திரி வீதி வளவுக்குள் (மீன் சந்தை) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்தில் சேர்ப்பிக்கவும். செ. மகாலிங்கம், 138 அரசடி ரோட். கந்தர் மடம், யாழ்ப்பாணம் 3384

## வடபகுதிக்கான தபால்கள்

[வவனியா]

அநுராதபுரத்தில் தேங்கிக் கிடந்த வடபகுதிக்கான தபால்கள் வவனியாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இங்கு அவை தரம் பிரிக்கப்பட்டு அனுப்பப்படும்.

## அறிவித்தல்

யாழ்.பரி. யோவான் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் ஆதரவில் சேவை நிதிக்காக

25-5-85 சனிக்கிழமை கல்லூரி மண்டபத்தில்

நடாத்தப்படவிருந்த **'இன்ரறக்ட் கதம்பம்'**

நிகழ்ச்சிதவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(3382) அதிபர், யாழ் பரி. யோவான் கல்லூரி.

## நன்றி நவிலல்

15-5-85 அன்று அலைகடலின் மத்தியில் நெடுந்தீவுப் பிரயாணிகளைச் சுமந்துவந்த குமுதினி படகில் நடாத்தப்பட்ட கொடூரமான இனப் படுகொலையின் போது உயிர் நீத்தவர்களுக்கும் படுகாயம் அடைந்தவர்களுக்கும் தேவையான அனைத்து உதவிகளைச் செய்த அனைவருக்கும் குறிப்பாக புங்குடுதீவு வாழ் மக்கள், பொது ஸ்தாபனங்கள், அமைப்புகள், சம்பந்தப்பட்ட சகல வைத்திய சாலை ஊழியர்கள், இரத்ததானம் செய்தோர், யாழ். செயலகப் பொறுப்பதிகாரிகள், படகுச் சேவைத் திணைக்கள ஊழியர்கள், இ. போ. ச. யாழ் சாலை ஊழியர்கள், தனியார் வாகன உரிமையாளர், மற்றும் வேண்டிய நேரங்களில் வேண்டிய உதவிகளைச் செய்து உதவிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

நெடுந்தீவு மக்கள்

3385

## 6-வது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 28-5-1932

மறைவு: 23-5-1979



பேராசிரியர்

### சோமசுந்தரம் செல்வநாயகம்

வான்நிலவு நீ மறைந்தாய் வையம் இருள் சூழ்ந்ததுவே
வையம் இருள் சூழ்ந்ததனால் வழிதெரியாது
[illegible] தவிக்கின்றோம்.

அன்பு மனைவி தயா,
பிள்ளைகள்:
நிரஞ்சன், நிர்மலா, நிர்த்தனன், நிருத்திகா.

''செல்வம்'' [illegible]
123, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (3386)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மறைந்தும் மறையாத மாணிக்கம்

### திருமதி தங்கரத்தினம் தெய்வேந்திரன்



மலர்வு: 23-01-1923

உதிர்வு: 23-05-1984

எமது அன்புத் தெய்வமாய், எமது குடும்பத் தலைவியாய், உயிர்மூச்சாய் வாழ்ந்த எமது இதய தெய்வமே நீ மறைந்து ஓராண்டு மறைந்து விட்டாலும் எமது கண்ணீர்தான் வற்றுதே. அம்மா, நின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

அன்பே சிவம்

இவ்வண்ணம்
கே. வி தெய்வேந்திரன்
(முன்னாள் யாழ். உதவி மேயரும், சமாதான நீதவானும்)
மகன்: தெய் இந்திரகுமார்
(பொறியியலாளர், லண்டன்)
சகோதர சகோதரிகள், மைத்துனர்மார்,
மைத்துனிகள், பேரப்பிள்ளை.

'இந்திர பவனம்',
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். 3378

# இன்றைய பலன்

வைகாசி: 10 (23-5-1985)
வியாழக்கிழமை
திதி: திருதியை காலை 6-29ன் மேல் சதுர்த்தி
நக்ஷத்திரம்: திருவாதிரை பிற்பகல்வரை

மேடம்: மூத்த சகோதரர் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படலாம். லாபவரவுகளும் உண்டு. குடும்பத்திலும் சிறுபிணி வாட்டத்திற்கும் இடமுண்டாம்.

இடபம்: பொது விவகாரங்களில் ஈடுபடுவோர் பொல்லாங்குகளை எதிர்நோக்க நேரும். இன்று அபாயகரமான காரியங்கள் எதிலும் பங்குபற்றுதல் கூடாவாம்.

மிதுனம்: உடல் சுறுசுறுப்புக் குன்றும். உடமைகள் தவறக்கூடும். உணவுவிடயத்தில் சுகாதாரம் வேண்டும். தூர பயணம் துயரத்தைத் தரும்.

கடகம்: தொழில சம்பந்தமான வரவுக்கு இடமுண்டு. எதிர்பார்த்த வேதனமும் தடைப்படலாம். நண்பராலும் நன்மையுண்டு.

சிங்கம்; சகோதரர்மூலம் சஞ்சலம் தரும் செய்திக்கும் இடமுண்டு. குடும்பத்திலும் சோர்வு தென்படும். முன்னேற்றமும் தடைப்படும்.

கன்னி: இயந்திரங்களுடன் பழகுபவர்கள் இன்று அவதானம் வேண்டும். வாகனச் சாரதிகள் போக்குவரத்தில் நிதானம் நன்று.

துலாம்: வியாபாரிகளுக்கு கணிசமான வரவுண்டு. வித்தையிலும் சமநிலை தென்படும். புத்திரர் ஒருவரின் உடல்நலம் குன்றும்.

விருச்சிகம்: திடீர் பிரயாணம் குறித்து திட்டமிடப்படலாம். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்க நேரும். பாதையிலும் பழுதுண்டு.

தனுசு: வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். வாழ்க்கையிலும் வசந்தம் வீசும். வரவிலும் திருப்தியுண்டு.

மகரம்: எம்முறையோர்களானாலும் நம்ப வேண்டாம். நண்பர்களாலும நச்சரிப்புக்கும் இடமுண்டு. குடும்பத்திலும் குறைகேட்க நேரிடும்.

கும்பம்: வாழ்வில் தெய்வ ஒளிவீசும் பெரியோராலும் வாழ்த்துண்டு. பிதாவழியாலும் நன்மையுண்டு.

மீனம்: தொழில் ஸ்தானத்தில் தொல்லைகள் தோன்றும். இன்று எவ்விடயத்திலும் அவதானம் வேண்டும். செலவிற்கும் இடமேற்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கிளிநொச்சியில் நடந்த ஹர்த்தால்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சகல வர்த்தக ஸ்தாபனங்களும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டிருந்தன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் முற்றாகவே செல்லவில்லை. இதனால் பாடசாலைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

## கொழும்பில் 37 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

நிக்கிரவெட்டிய பொலிஸ் நிலையத்தாக்குதல், மக்கள் வங்கி கொள்ளை போன்றவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முப்பத்தியேழு தமிழ் இளைஞர்கள் விமானப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட இத் தமிழ் இளைஞர்கள் தற்பொழுது தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [து]

## கிளிநொச்சியில் நடந்தது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகருக்கு வெட்டுக் கத்திகளுடன் கோஷ்டி ஒன்று வந்துள்ளதாகக் கடந்த திங்கள் காலை பரவிய வதந்தி ஒன்றைத் தொடர்ந்து நகரில் பெரும் பரபரப்பேற்பட்டது.

இதைச் கேள்வியுற்ற பலர் கிராமப்புறங்களை நோக்கி ஓடினர்கள். பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகளைப் பெற்றோர் அவசரவசரமாகப் பாடசாலையிலிருந்து கூட்டிச் சென்றனர். கடைகளும் பூட்டப்பட்டன.

இவ்வதந்தி கிராமப்புறங்களுக்கும் பரவியதால் கிராம மக்களும் கிலி கொண்டனர். ஆனால் எவ்வித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. (க)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதன ஆண்டு வைகாசி மாதம் 11-ந் திகதி (24 5 85) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-32 மணி முதல் 10 16 மணி வரையுள்ள சுபவேளையில்,

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
தம்பிஐயா
சின்னராசா
(மயூதரன் அன் கம்பெனி, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது
சிரேஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
பத்மசுந்தரி
அவர்களுக்கும்

திருவருள் துணைக்கொண்டு கந்தர்மடம் பழம்வீதிப் பிள்ளையார் கோவிலில் திருமணம் நிகழவிருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி சி. தம்பிஐயா,
சகோதரர்
தம்பிஐயா சிவராசாவும்
பாரியாரும்
சைவப் பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

ந பழனிச்சாமியும்
(ஆசிரியர்)
பாரியாரும்
115, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(3389)

## மணிவாக்கு

நம்பிக்கையைக் கொண்டு, மனிதன் வீரத்தை நிருணயித்து விடலாம்.

— எமர்சன்.

# நமது நோக்கு

## ஒப்பற்ற வெற்றி

நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அடையாள உண்ணாவிரதப் போராட்டம் பூரண வெற்றியில் முடிந்ததை இங்கு வாழும் மக்கள் கண்ணுரக் கண்டனர்.

இதில் என்ன புதுமை உண்டென்று கேட்பது நியாயமாகும். மலைபோல் வந்தாலும் தலையில் சுமக்குமளவு பலம் இவ்வித ஒற்றுமையை வளம்படுத்தும். எனவே இதில் புதுமை இல்லைபோல் தோன்றும்.

ஆனால் புதுமைக்கு இடம் உண்டென்பதால் நாம்அந்த வெற்றியை ஒப்பற்றவெற்றி என்று சொல்கின்றோம். ஒற்றைக் கதவில் இருந்தகடைகளை எண்ணிக் கணக்குப் போட்டு கேலி செய்யும் கூட்டத்தினர் இந்தக் காரிருளிலும் இருக்கவே செய்யும்.

ஆனால் ஒருதலைவர் 'கடை அடை' என்று சொல்ல அடைத்து, இன்னொருவர் 'திற' என்னததிறந்து மக்கள் ஒற்றுமையின்றி சிதறியிருந்த காலம் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்தது; அது இன்று மலையேறிவிட்டது

மொழியா, மதமா வலிமைமிக்கது என்ற விவாதம் உலகுள்ளளவும் தொடரும்; மதம் என்று பாகிஸ்தான் உருவானபோது சொல்லப்பட்டது.

பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து ஒரு தனி நாடானபோது, 'பார்த்திங்களா' மொழி என்று வெட்டிச் சொல்லப்பட்டது.

விவாதத்துக்கு முடிவு கூற நாம் முற்படவில்லை. மொழியோ, மதமோ, இனமோ, நிறமோ மக்களைப் பிரிக்க அனுமதிக்கப்படாது என்பது எமது பிடிவாதமான கொள்கை. அரசியல் கொள்கை தானும் மக்கள் மத்தியில் பிரிவினையை உண்டாக்குவதால் ஜனநாயகம் என்று சொல்லடபடும் சனிநாயகம், தமிழ் மக்களை எத்தனை கூறுகளாகப் பிரித்துள்ளது?

இன்று நாட்டில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் நிச்சயம் இனம் என்றரீதியில் அல்ல. மொழி என்ற அடிப்படையில் ஒற்றுமைப்படுத்த முடியாவிடின் வேறெந்தக் காலத்திலும் அது கைகூடாதென்பது ஒரு தலை.

இந்த ஒற்றுமையை நடந்தேறிய உண்ணாவிரதம் விளக்குகின்றது. பேதங்கள் மலிந்த இடம் யாழ்ப்பாணம் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தினுசு. அபிப்பிராய பேதம், சாதி, மத, குல பேதம் ஆயிரம், ஆயிரம்!

எனவே இந்தத் தனித்துவமான கூட்டத்தினர் எல்லோரும் எவ்வித பேதமும் இன்றித் தமிழர் என்ற அடிப்படையில் மன உறுதி பெறுவதனால் அது இக்காலத்து அற்புதம் என்றே கொள்ளவேண்டும்.

உறுதி உடையவர்கள் இறுதியில் வெற்றிஅடைந்து விளங்குவார்கள் என்று வாசாலமாக நாம் சொல்லவில்லை பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடும் இறுதி வெற்றி என்பது வெற்றி இறுதியென்ற கருத்துடையது.

இன்றும் சிலர் வானத்திலே உலாவுகின்றனர். கசப்பான உண்மைகளையும் கடும் அனுபவங்களையும் புறக்கணித்துவிட்டு கனவுலகில் களித்துத் திரிவதில் களைப்படையவில்லை.

எதிர்நீச்சலடித்து வாழ்க்கையிலே கரைசேரவேண்டுமென்ற நினைபபு இன்று ஒருமக்கள் கூட்டம் என்ற கோதாவில் பரிசாகக் கிடைத்திருக்கிறது.

இந்தக் கூட்டத்தினர் யார்?! இவர்களை உலகுக்கறிமுகப்படுத்த தமிழகத்தில் மூன்று அருமந்த உயிர்கள் தீக்கிரையாகிவிட்டன.

திராவிடமுன்னேற்றக்கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி இலங்கைவாழ்தமிழ்மக்களைப் பாதுகாக்க இந்தியா ராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று கேட்டது சரியோ, பிழையோ என்பதல்ல முக்கியம்; அதற்காக அவர் எடுத்த நடவடிக்கை காரணமாக கைதுசெய்யப்பட்டார். இதனைக் கேள்விப்பட்ட மூவர் தீக்குளித்து மரணமாகினர்.

இதுபற்றி அனாவசிய வாதம் வேண்டாம். தானுடாவிட்டாலும் தசைஆடு மல்லவா? இன்று எங்கும் நடப்பது அந்த ஆட்டமே!

'தமிழ்' என்பது ஒரு வெறும் மொழியா? அப்படியானால் தனிநாயக அடிகளார், ஞானப்பிரகாச அடிகளார் இன்னும் பல ஐரோப்பிய தமிழ் ஆராய்ச்சி நிபுணர்களை நாம் எழுப்பி வரவேண்டும்.

நாம் ஒரு தலைசிறந்த மக்கள்கூட்டம், பண்டைய பண்பாடும் இன்றைய பெருமையும் நிறைந்த சமூகம்.

இந்த எண்ணத்தில் எமது மனம் பதிகிறதற்கு இதுவே சீசன்.

இரும்புத்தூண் போன்ற இந்த நம்பிக்கையில் நாம் உறுதி கொள்வோமானல்; உறங்கியிருக்கும் கோடை காலம் துயில் விட்டெழும் என்பது நிச்சயம்.

இளமைமிகுந்த தமிழ் உலகம் நல்வழி காட்டும் பணியில் தொடரட்டும்.

## இன்று தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் மகாவில் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது.

## அலங்கார உற்சவம்

(வண்ணார்பண்ணை)

தொல்புரம் கொட்டடிப்பதி ஆதிமுத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் 24-ம் திகதி ஆரம்பமாகிறது.

10-ம் நாள் தீர்த்த உற்சவத்தையடுத்து பொங்கல் நிகழ்ச்சிகளும் வழமை போல் நடைபெறவுள்ளன.

# ஆபத்து வேளைகளில் ஆதரவளித்த சோவியத் மக்கள்

## இந்தியப் பிரதமர் நன்றி

(மாஸ்கோ)

"கடந்த முப்பது ஆண்டு காலமாகப் பராமரிக்கப்பட்டு வந்திருக்கும் சோவியத்-இந்திய நல்லுறவைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு இந்திய அரசு பாடுபடும்" என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தெரிவித்தார்.

ஆறு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சோவியத் யூனியனுக்கு வந்த பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்கு சோவியத் அதிபர் திரு. மைக்கல் கொபர்சேவ் நேற்று முன்தினமிரவு அளித்த விருந்து வைபவமொன்றில் பேசுகையிலேயே திரு. ரஜீவ் காந்தி இவ்வாறு குறிப்பிட்டார்.

சோவியத் யூனியனுடனான ஒத்துழைப்பும் நல்லுறவும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையுடன் இணைந்த பகுதியாகும். இந்தியாவிற்கு இடுக்கண் நேரிட்ட காலத்திலெல்லாம் ஆதரவளித்துஉதவியுள்ள நண்பர்களாகவே சோவியத் நாட்டு மக்களை இந்திய மக்கள் கருதுகிறார்களென்றும் திரு. ரஜீவ் காந்தி கூறினார்.

### இந்துமாகடல் இராணுவப் பெருக்கம்

இந்துமா கடல் பிரதேசத்திலும் இந்திய எல்லைக்கு அப்பாலும் பெருகிவரும் இராணுவ வசதி குறித்து திரு ரஜீவ் காந்தி தனது கவலையையும் அங்கு தெரிவித்தார்.

தெற்காசியப் பிராந்தியத்தில் சுமுகமான, சிறப்பான நல்லுறவுகளை இந்தியா பேணிக்காக்கும் என்று தெரிவித்த அவர், அயல்நாடுகளுடன் தன்னுடைய உறவுகளை மேம்படுத்திக்கொள்வதற்கும், அமைதியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கும் இந்தியா மேற்கொண்டுள்ள முன்முயற்சிகளை நினைவுகூர்ந்தார்.

சர்வதேச நிலைமைபற்றி அவர் குறிப்பிடும்போது, பாலஸ்தீனியர்களின் சட்டபூர்வமான உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டுவருவதையும், ஆபிரிக்க மக்களுக்கு எதிராகத் தென்னுபிரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் இன ஒதுக்கல் கொள்கை மற்றும் ஆக்கிரமிப்புப்பற்றியும், நமீபியாவில் நடக்கும் உரிமை மீறல்கள்பற்றியும், லத்தீன் அமெரிக்காவில் அரசுகளின் சீரான இயக்கத்தைச் சீர்குலைப்பதற்காக நடக்கும்முயற்சிகள், தென்மேற்கு மற்றும் தென் கிழக்காசியாவில் நீடித்து நடந்துவரும் ஆயுதப் பூசல்கள் முதலிய விடயங்கள்பற்றியும் பேசினார்.

உலகத்தின் எந்தவொரு பகுதியிலும் செய்யப்படும் எல்லா வடிவிலுமான வெளியார் தலையீடுகளையும் இந்தியா எதிர்க்கிறதென்றும், படைக்குறைப்புப்பற்றிய சோவியத்-அமெரிக்கப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர்ந்து நடைபெறுவதையும், அணு ஆயுதங்களை முற்றிலுமாக அகற்றிவிடுவதற்கான பணியில் உழைப்பது என்ற இரு நாடுகளின் மன உறுதியையும் திரு ரஜீவ் வரவேற்றார்.

சோவியத்தும், இந்தியாவும் உலகசமாதானத்தை நிலைநாட்டுவதென உறுதிபூண்டுள்ளன. ஜவஹர்லால் நேருவும், இந்திரா காந்தியும் வகுத்துள்ள தேசிய வளர்ச்சியை இந்தியா தொடர்ந்து பின்பற்றி வரும் எனறும் தெரிவித்தார்.

### சோவியத் தலைவர்

சோவியத் தலைவர் திரு. கொபர்சேவ் தம்முடைய உரையில், இந்தியாவுக்கும், சோவியத் யூனியனுக்குமிடையேயான உறவுகள், சமத்துவம் மற்றும் பரஸ்பர மதிப்பு மரியாதையின் அடிப்படையில் அமைந்தவை என்று கூறினார்.

போரபாயத்தையும், ஆயுதப் போட்டியையும் அகற்றுவதற்கான இந்திய-சோவியத் முயற்சிகள் முன்னேறி வருவதாகவும் திரு. கொபர்சேவ் குறிப்பிட்டார். (து)

# அநுராதபுரம் அரச அதிபர் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு உதவினர்!

[கிளிநொச்சி]

அநுராதபுரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை காப்பாற்றுவதில், அநுராதபுரம் அரசாங்க அதிபர் பெரும் உதவி புரிந்ததாக அநுராதபுரத்திலிருந்து கிளிநொச்சி வந்து சேர்ந்த குடும்பங்கள் தெரிவித்தன.

சுமார் 20 குடும்பங்கள் நேற்று கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

தாம் நீண்டகாலமாக பழகிய அநுராதபுரம் நண்பர்களே தமது கண்முன்னால் தமது வீடுகளை தீ வைத்துக் கொழுத்தினர் என்றும் பொருட்களை கொள்ளையடித்தனர் என்றும் பலரை வெட்டிக் கொன்றனரென்றும், தாங்கள் உயிர் தப்பியது அதிசயமான செயல் எனவும் கூறினர்கள்.

சில சிங்கள, முஸ்லிம் நண்பர்கள் மனிதாபிமானத்துடன் தங்களைக் காப்பாற்றினர்கள். என்றும் இவர்கள் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

பற்றைக்குள்ளும், வயல் மேடுகளிலிலும். வாய்க்கால்களிலும் தாம் ஒழித்திருந்ததாகவும் தப்பிவந்த வேறு சிலர் தெரிவித்தனர்.

அனுராதபுரம் சிற்றம்பலம் தியேட்டர், கதிரேசன்கோயில் உட்பட தமிழரின் பல வீடுகள் முற்றுகவே சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

# பாதிக்கப்பட்டோரின் விபரம் சேகரிக்கிறார்கள்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தில் இடம் பெற்ற அசம்பாவித சம்பவங்களின் பின் தென் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் 'பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கம்' ஈடுபட்டுள்ளது.

இது சம்பந்தமாக மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அனுராதபுரத்தில் இடம் பெற்ற அசம்பாவித சம்பவங்களின் பின் தென் இலங்கையில் பணியாற்றிய தமிழ் ஊழியர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டும், படுமோசமாகத் தாக்கப்பட்டும் பாதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவங்களினால் அப்பகுதிகளில் பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் பாதுகாப்பின்மை காரணமாக வேலைக்குச் செல்ல முடியாத நிலையிலும், பல ஊழியர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விபரங்களைத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அவ்வூழியரின் குடும்பத்தினர் கவலை அடைந்துள்ளனர். ஆகவே இச்சம்பவங்களினால் வேலைக்கு செல்ல முடியாது இருப்பவர்களும் ஏற்கனவே வேலைக்குச் சென்று அவர்கள் பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாது இருப்பவர்களும் அரச, கூட்டுத்தாபன தனியார்துறை தமிழ் ஊழியர்கள் அனைவரினதும் விபரங்களை 'யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 95/1-ம் இலக்கத்தில் உள்ள 'பாதிக்கப்பட்ட ஊழியர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.' (மா)

## றம்ழான் சிந்தனை

இஸ்லாம் என்றால் என்ன? வணக்கத்துக்கும் பாத்திரமானவன் அல்லாஹீகஅல்லாவைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்று சாட்சியம் கூறுவதும், தொழுகையை நிலைநிறுத்துவதும் தருமஞ் செய்வதும் (ஸக்காத் கொடுப்பதும், றம்ழான் மாதத்தில் நோன்பை நோற்பதும் வசதியுள்ளவர் ஹஜ்ஜை நிறைவேற்றுவதாகும்.

—அல். குர். ஆர்

நோன்பு துறக்கும் நேரம் 6 21

நோன்பு ஆரம்பிக்கும் நேரம் 4.18

அல்லாஹீம்ம லகஸும்து வபிக அமன்து வஅலைக்க தவக்கல்து வஅலா றஸ்கிக அப்தர்த்துப தகப்பல் மின்னீ;

—ஜனுப் ஐ. எம். முஸ்தபா.

# இலங்கை அரசின் போக்குப்பற்றி தமிழ்நாடு எழுத்தாளர் மன்றம் கண்டனம்

[சென்னை]

இலங்கை அரசின் நடவடிக்கைகள் சர்வதேச நெறிமுறைகளுக்கு முரணனதாகவும், இந்தியாவுக்கு ஆத்திரமூட்டுவதாகவும் இருக்கிறது என்று தமிழ்நாடு எழுத்தாளர் மன்றத்தின் செயற்குழுக் கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் பி. டி. ஐ. நிருபர் கிருஷன் ஆனந்த் கைது செய்யப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்த இம்மன்றம், தற்போது பிணையில் விடப்பட்டிருக்கும் திரு. ஆனந்தை நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (து)

### மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலில்

# சரணடைந்த இரு பொலிசார் கிளிநொச்சியில் விடுதலை

(கிளிநொச்சி)

மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது தாக்குதல் நடத்திய தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் இயக்கத்தால் சிறைபிடிக்கப்பட்ட பொலிஸாரில் இருவர் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் பவுத்திரமாக விடுவிக்கப்பட்டனர்.

சுசில் பண்டார சுமனசிறி (2‹ வயது), ஒஸ்ரின் (55வயது) ஆகியோரே விடுவிக்கப்பட்ட இருவருமாவர்.

இவர்கள் இருவரும் சாறமும் சேட்டும் அணிந்து காணப்பட்டனர். புனித திரேசாள் ஆலயத்தில் விடுவிக்கப்பட்டதும் அங்கிருந்த வண. பிதா இதுவிஷயம் பற்றி உடனடியாகக் கிளிநொச்சிப் பொலிசாரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, இ போ ச பஸ் ஒன்றில் இருவரும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டனர்.

ஒஸ்ரின் சுகவீனமுற்றிருந்ததால் அவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரி டாக்டர் தர்மகுலசிங்கம் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு சிகிச்சையளிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டது.

ஒஸ்ரின் மயக்கமாக இருக்கக் காணப்பட்டதாகவும் இருவரும் சாரமும் சேட்டும் அணிந்திருந்ததாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சுசில் பண்டார சுமன சிறி நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருந்தார்.

தங்கள் இருவரையும் கடத்திச் சென்ற இளைஞர்கள் மிகவும் நல்ல முறையில் உணவு உடை தந்து கவனித்ததாகவும் வேண்டிய வசதிகளைச் செய்து தந்ததாகவும், வைத்திய வசதியை நல்ல முறையில் வழங்கியதாகவும் அவர்கள் மிகவும் அன்பாக நடந்து கொண்டதாகவும் சுமனசிறி தெரிவித்தார். இதே வேளை ஆயுதப்படையினர் கிளிநொச்சியில் உள்ளகத்தோலிக்க குருமாரை விசாரணைக்காகக் கொண்டு சென்றதாகவும் தெரிய வந்தது.

---

## மின்சாரத்துக்கு பலியானார்

[யாழ்ப்பாணம்]

அரியாலையைச் சேர்ந்த 18 வயதான த ராஜேந்திரன் என்பவர் மின்சாரத்திற்குப் பலியானார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ் பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினர்.

வீட்டிலுள்ள வானொலி இயங்காததனல், அதனைச் சரி செய்ய முயற்சித்தபோது மின்சாரத்தினல் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மின்சாரத்தினல் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

---

## பெண்கள் மீது பலாத்காரம்: அன்னையர் முன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

'பெண்களை ஆயுதப்படையினர் பலாத்காரம் செய்யும் முயற்சிகள் சமீபகாலமாகஅதிகரித்து வருகிறது. இம்மாதம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற இடங்களில் பெண்களை இம்சித்து, 13-ம் திகதி நாயன்மார்கட்டு, கல்வியன்காடு ஆகிய இடங்களில் கர்பிணிப் பெண்கள் பலாத்காரம் செய்த இழிசெயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்'' என்று அன்னையர் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பலாத்காரத்திற்குள்ளான பலர் சமூகத்தின் அபவாதத்திற்கு அஞ்சியும், இதனைத் தனிப்பட்ட அவமானமாகக் கருதியும், ஒழுக்கக் கேடாக எண்ணியும் தம்மை அழித்துக்கொள்ள முனைவதாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

பெண்களைப் பலாத்காரம் செய்வதென்பது பெண்களுக்கெதிரான வன்செயல்களின் மிகமோசமான வடிவமே. எனவே இதனைத் தனிப்பட்ட அவமானமாகவோ, ஒழுக்கக் கேடாகவோ கருதாது, இந்த அட்டூழியங்களை வெளிப்படுத்தி, அநீதிகளைப் பகிரங்கப்படுத்தி இவற்றுக்கெதிரான உணர்வை வளர்த்துக் கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்'' என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## சீருடை அணிந்த நால்வர் பற்றி மாகோவில் சந்தேகம்

[கொழும்பு]

மாகோவில் இராணுவ சீருடையணிந்த நல்வா கடந்த செவ்வாய் நள்ளிரவு வான் ஒன்றில் காணப்பட்டனர்.

இவர்கள் மாகோ புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள ஹோட்டலில் தேநீர் அருந்தியதாகவும், பின் 50 ரூபா கொடுத்துவிட்டு மிகுதியை வாங்காமல் சென்றார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஹோட்டலுக்குள் இவர்கள் தனித்தனி மேசையில் இருந்தே தேனீர் அருந்தினர்கள் என்றும் கூறப்படுகிறது.

அநுராதபுரம் படுகொலைச் சம்பவத்தின் பின்னர், இவர்கள மகாவறகு வந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது (க)

---

## சென். ஜோன்ஸில் பற்சிகிச்சை நிலையம்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் சுகாதார திணைக்களத்தினல் பற்சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது கல்லூரி அதிபர் திரு சி ஈ ஆனந்தராஜன் யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட முயற்சியினல் இந்தப் பற்சிகிச்சை நிலையம் திறக்கப்பட்டுள்ளது

---

## இவர்களுக்கு தற்காலிக ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

தென்னிலங்கையில் கடமையாற்றும் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம் வந்து போக்குவரத்துப் பிரச்னை காரணமாக மீண்டும் தாங்கள் கடமை யாற்றும் இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ளதை அடுத்து அவர்களுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தற்காலிகமாகக் கடமையாற்ற நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் மேற்படி உத்தியோகத்தர்களான டாக்டர்கள், உதவி வைத்திய அதிகாரிகள் மருந்தாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியோர் சமூகமளித்துத் தங்கள் பிரச்னைகளை எடுத்துக் கூறியதை அடுத்து தற்காலிகமாக இப்பகுதி வைத்தியசாலைகளில் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

---


லங்கெம் விவசாய இரசாயனங்கள் நீண்ட காலமாக விலைக்கும், செயற்திறனுக்கும் முதலிடம் பெற்றவை.

அவை இலங்கை விவசாயிகள் அபரிமித அறுவடை பெற உதவுகின்றன. சமீபகாலமாக பெருகிவரும் இரசாயனத் தயாரிப்புகளிலிருந்து எமது தயாரிப்புகளை இனங்காண்பது இலகுவாகவேண்டும் என நாம் கருதுகிறோம். எனவேதான் எமது தயாரிப்புகளின் செயற்பாட்டுத்திறன் போலவே அவற்றின் லேபில்களும் தனித்துவமாகத் திகழ வேண்டுமென எண்ணி தனித்துவ தோற்றம் வழங்கியுள்ளோம். சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு இது! ஏனெனில் இப்போது லங்கெம்100% இலங்கையருக்கே உரித்தான பொதுக் கம்பனியாகியிருக்கிறது. ஆம், அது உங்கள் கம்பனி!

லங்கெம் விவசாய இரசாயனங்களின் சில பெயர்களும். சகல லேபிள்களும் மாற்றப்பட்டுப் புதுத்தோற்றம் பெற்றுள்ள போதிலும் தரத்தில் மாற்றமேதுமில்லை!

| புதிய பெயர் | பழையபெயர் | புதிய பெயர் | பழைய பெயர் |
|---|---|---|---|
| டியல்றின் 20. | டியல்ட்ரெக்ஸ் 20 | கொலர் புரடெக்டன்ட் | ஷெல் கொலர் புரடெக்டன் |
| அல்ட்ரின் 20. | அல்ட்ரெக்ஸ் 25 | TB 192 பனல் டிரெஸ்ஸிங் | ஷெல் TB 192 |
| மொனேகுரேட்டபொஸ்60% | அசோட்ரின் 60 | லங்கெம் DD | ஷெல் DD |
| மெதாமிடோபொஸ் 60 | மெதாமிடோ பொஸ் LC 60% | செர்பக்டன்ட் N | அக்ரிகல்சர் சேர்பக்டன்ட் N |
| லங்கெம் M-50 | களைநாசினி M 50 | லங்கெம் ப்ளவரிங் ஹார்மோன் | ஷெல்ஸ்டோன் P |
| லங்கெம் பரகுவாட் | பரகுவாட் | லங்கெம் சல்பர் | டிஸ்பேர்சிபிள் சல்பர் |
| லங்கெம் சினெப் | சினெப் | | |

LANKEM

நாடெங்குமுள்ள லங்கெம் வியாபாரிகளிடம் விரைவில் கிடைக்கும்.

# லங்கெம், புதுத்தோற்றம்.




விலை ரூ. 19.50 முதல்.

HTL LK 1695

## லங்கெம். விவசாயிகளின் தோழன்.

லங்கெம் சிலோன் லிமிட்டெட் 760, 762 பேஸ்லைன் வீதி, கொழும்பு 9. தொலைபேசி: 598292-6

# இரண்டு தலைமுறையாக வாழ்ந்து அகதிகளான 10 குடும்பங்கள்!

[யாழ்ப்பாணம்]

அநுராதபுரத்தில் இரண்டு தலைமுறையாகவாழ்ந்த சுமார் பத்து குடும்பங்கள் கிளிநொச்சிக்கு வந்துள்ளன.

அங்கு ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து 3 தினங்கள் அவர்கள் காட்டுக்குள் இருந்துவிட்டு, கடைசியில் பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு குடும்பத்தில் பெற்றோரை இழந்த 3 சிறுவர்களும் வந்துள்ளனர்.

இதேபோன்ற மற்றும் சில குடும்பங்கள் அனுராதபுரத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. (க)

## 2 சடலங்கள்

[வவனியா]

வவனியா புகையிரத நிலையத்திற்குச் சற்று அருகில் ரயில் பாதைக்குப் பக்கத்தில் இரு சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கடந்த 17-ம் திகதி காணப்பட்டன.

அத்துடன் இதே தினத்தில் 32 வயதான சர்வானந்தா என்பவர் சூட்டுக் காயத்துடன் வவனியா அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சன்னம் இவரது வாயைக்கிழித்து நாக்கைத் துண்டித்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டு காயத்துடன் காணப்பட்ட சடலங்கள் ரயில்வே பகுதித் தொழிலாளியான கனகசபை, சூசைப்பிள்ளையார் குளத்தில் உள்ள லொறி கிளீனர் கணேஸ் ஆகியோரது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இரு சடலங்களும் வவனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

## 'ரெலா' வும் கண்டிக்கிறது

[யாழ்ப்பாணம்]

''அநுராதபுரம், வில்பத்து ஆகிய இடங்களில் அப்பாவிச் சிங்கள மக்கள்மீது நடாத்தப்பட்ட தாக்குதலை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசியலறிவு போதாதவர்களாலே மேற்படி சம்பவம் நடத்தப்பட்டுள்ளது.

''பொதுமக்களைத்தாக்குவதனால் உலகநாடுகளில் எம்மீதுள்ள நல்லபிப்பிராயம் கெடும்'' இவ்வாறு தமிழீழ விடுதலை இராணுவம் [ரெலா] விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது இச் செயல்கள் யாவையும் எமது தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத செயலாகும். நாம் அடையப்போவது தமிழ்ப் பண்பாட்டுக் கலாச்சாரத்திற்கேற்ப ஓர் சோஷலிஸத் தமிழீழமே என்பதை சகலரும் உணர வேண்டும் என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

# வவனியா நகரில் தாக்குதல் சம்பவம்!

[வவனியா]

வவனியா நகரில் பொது மக்களும், கடைகளும, வங்கிக்குச் சென்ற வாடிக்கையாளர்களும் கடந்தவெள்ளிக்கிழமை தாக்கப்பட்டார்கள்,

வங்கிக்கு சென்றவர்கள் வைப்பில்இடுவதற்கு கொண்டு செல்லப்பட்ட ரொக்கப் பணங்கள் பறிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது,

வவனியா நகரிலுள்ள ஒரு [illegible] வியாபார ஸ்தாபனத்திலிருந்து சுமார் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட ரொக்கப்பணம் ஒரு கோஷ்டியினரால் எடுத்துச் செல்லப்பட்டதாம், [க]

# ஓமந்தை முகாமில் 146 அகதிகள்!

(வவனியா)

அனுராதபுரத்திலிருந்து அகதிகளாக வவனியா வந்துள்ள தமிழர்கள் ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

146 பேர் இங்கு அகதிகளாக வந்துள்ளார்கள். இதில் சிறுவர்கள், குழந்தைகள், பெண்களும் அடங்குவார்கள்.

வவனியா கச்சேரி நிர்வாகம் இவர்களை பொறுப்பேற்றுள்ளது. அகதிகளாக வந்தவர்கள் சுமார் 40 வருடத்திற்கு மேலாக அனுராதபுரத்தில் பரம்பரை குடிமக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சரணாலயங்கள் மூடப்பட்டன

(கொழும்பு)

பாதுகாப்பை முன்னிட்டு குமண, யால ஆகிய வனவிலங்குச் சரணாலயங்கள் மூடப்பட்டுள்ளன.

## தேசிய தொழிற் பயிற்சிப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

தேசிய தொழிற் பயிற்சி சபையால் கடந்த 10ம் திகதி கொழும்பில் நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்ற முடியாத வடபகுதி பரீட்சார்த்திகளுக்குப் பிறிதொரு திகதியில் பரீட்சை நடாத்த தேசிய தொழிற் பயிற்சி சபை இயக்குநர் சம்மதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

பிரயாண வசதியின்மை காரணமாக மேற்படி பரீட்சைக்கு வடபகுதி பரீட்சார்த்திகள் தோற்ற முடியாத சூழல் ஏற்பட்டது குறித்து இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு. எம். செல்லச்சாமி, செயலாளர் திரு. எஸ். சிவஞான ஆகியோர் தேசிய தொழிற் பயிற்சி சபை இயக்குநரிடம் தெரிவித்திருந்தனர்.

அதற்கிணங்கிய இயக்குநர் வேறொரு திகதியில் நடாத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## தன்னலமற்ற சேவையாளர் குணநாயகம்

வவனியா உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் கடமை நேரத்தில் பயங்கரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் வட இலங்கையையே திகில்கொள்ள வைத்துள்ளது.

வடக்கில் பல பகுதிகளில் உதவி அரசாங்க அதிபராக பணியாற்றிய திரு. குணநாயகம்' கடமைஉணர்வும் சேவை மனப்பான்மையும், துணிவும் நிறைந்த ஒரு அரசாங்க அதிகாரியாகப் பணியாற்றியவர்.

பல்கலைக்கழக காலம்முதல் இறுதிவரை மக்களுக்கு மனம்விட்டு உதவிசெய்யும் இவர் தாம் கடமையாற்றிய பகுதிகள் எல்லாவற்றிலும் மக்கள் போற்றப் பணிபுரிந்தவர்.

தீவுப்பகுதியிலும், பூநகரியிலும், கிளிநொச்சியிலும், கரவெட்டியிலும்' வவனியாவிலும், கிழக்கு மாகாணத்திலும் பரவலாக உத்தியோக ரீதியான தன் கடமைகளைச் செய்த போதும் பிரதேச மூலவள அபிவிருத்தித்துறையில் ஆர்வமும், அக்கறையும் கொண்டு செயல்ப்பட்டு வந்தவர் இப் பணிகளில் ஸ்தாபன ரீதியாக கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் சனசமூக நிலையங்களையும், இயங்க வைத்தவர் சுறுசுறுப்பாக மூகங்கோணாது சேவையேதன் கடமையென எண்ணி வாழ்ந்த இவரது மறைவு இவரது சேவைநேரத்திலேயே முடிந்தது

வடஇலங்கை இவரது இழப்பைக் கேட்டுத் துயருறும் இச் சந்தர்ப்பத்தில் தீவுப்பகுதிதன் எதிர்காலத் தலைமைச் சந்ததி ஒன்றை இழந்து நிற்கிற அன்னாரின ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

சி. பாலசிங்கம்

## கோஷ்டிச் சண்டை

(யாழ்ப்பாணம்)

மினிபஸ் உரிமையாளர். தொழிலாளர்களிடையே இடம்பெற்ற கோஷ்டிச் சண்டையில் சிலர் படுகாயமுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

கோப்பாய் - அச்சுவேலி ஆகிய இரு இடங்களைச் சேர்ந்தவர்களிடையே இக்கோஷ்டி மோதல் இடம்பெற்றதாம். (மா)

## ரஜீவ்—கொர்பசேவ் சந்திப்பு

(மாஸ்கோ)

இந்தியப் பிரதமர் திரு' ரஜீவ் காந்தியும் - சோவியத் அதிபர் திரு. கொர்பசேவ்வும் நேற்று முன்தினம் மாஸ்கோவில் சந்தித்து மூன்று மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

பொதுவாக பேரழிவுக்குறைப் புக்கும் அணு ஆயுதங்களை மொத்தமாக அழித்து விடுவதற்கும் அவசரமான தேவை இருப்பதாக இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(து)

## பாராளுமன்றம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று எதிர்பார்க்கப்படுகிறது

இன்று முற்பகல் ஊர்வலமாகச் செல்லும் இவர்கள், மகஜரொன்றைக் கொண்டு சென்று பாராளுமன்றத்தில் பிரதமரிடம் ஒப்படைக்கலாம் என்று அறியப்படுகிறது

## ஜனாதிபதி..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சர் எஸ். தொண்டமானுடன், இ தொ. கா பொதுச்செயலாளர் திரு. எம் எஸ். செல்லச்சாமியும் கலந்து கொண்டனர்.

இச்சம்பவம் குறித்து தாம் எதுவும் அறியவில்லை என்றும் இதுகுறித்து விசாரிப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

## வன்செயல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பில் ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில், சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளில் மார்க்ஸிஸக் கொள்கைகளை பின்பற்றும் குழுக்கள் ஜனநாயக அரசாங்கங்களை செயலிழக்க செய்துவருகின்றனர் என்றும் ஜனாதிபதி ரீகன், பிரதமர் தட்சர் ஆகியோரை கொலை செய்ய மேற்கொண்ட முயற்சிகளையும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் கொலையையும் குறிப்பிட்டார்.

நாட்டை எதிர்நோக்கும் பிரச்னையில் பல தன்மைகள் உள்ளன என்றும் அவை அரசியல், சமயம், இராணுவம் என்றும் தெரிவித்த ஜனாதிபதி, இராணுவ அதிகாரிகள் இராணுவம் சம்பந்தப்பட்ட விடயங்களை தமக்கு அடிக்கடி அறிவிப்பதுபோல் ஏனையதுறையினருடனும் நாட்டில் அமைதியற்ற நிலை குறித்து அடிக்கடி கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்தார். (ரா)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்ட பிரிவினை கருத்துக்கள் பற்றிய கேள்விகளுக்கு திரு. ஹெய்டன் பதிலளிக்கையில்; ''திரு. அமிர்தலிங்கம் ஒரு தனிப்பட்ட மனிதர். அவர் அரசாங்க பேச்சாளர் இல்லை. கட்சி சார்பில் அவர் தமது கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். ஜனநாயக நாடான ஆஸ்திரேலியா இவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்ளும்'' என்று கூறினார்

தமிழ்த்தீவிரவாதிகளுக்கு ஆஸ்திரேலியாவில் நிதி சேகரிக்கப்படுகிறது என்பதில் எவ்வித உண்மையும் இல்லை'' என்றார்.

### நீலன் சந்திப்பு

திரு ஹெய்டன் தாயகம் புறப்படுவதற்கு முன்னர் கலாநிதி நீலன் திருச்செல்வத்தைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஒருமணி நேரம் உரையாடினார்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ்மக்கள்படும் இன்னல்கள் குறித்து மிகவும் நிதானமாகக் கேட்டறிந்த அமைச்சர் ஹெய்டன்; இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வே பரிகாரம் அளிக்கும் என்று தெரிவித்தார்.

தாம் சந்தித்த பல பௌத்த மதகுருமாரும் இதனையே தம்மிடம் வலியுறுத்தியதாகவும் திரு, ஹெய்டன் கூறினார்,


ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன் - ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

லிடோ சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
ஆயிரம் வாசல்
இதயம்
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
மௌன கீதங்கள்
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்டுவித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
விதி
(கலர்)

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
ரஜனி, கமல்,
ஜெயசித்திரா நடித்த
இளமை
ஊஞ்சலாடுகின்றது
(கலர்)

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்)
BLACK
EMMANUEL
பிளாக் எம்மானுவல்
(குறிப்பிட்ட சிலதினங்களுக்கு மட்டும்)
கருத்தோட்டமுள்ள விறுவிறுப்பான காட்சிகளுடன், புத்தம் புதிய படப்பிரதியில் தெளிவாகக் காண்பிக்கப்படுகின்றது.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

வின்ஸர்
தினசரி 10-30, 2-30
ஜேம்ஸ் பொண்ட் சித்திரம்
எம் ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன், - நாகேஷ்
ஆனந்தன்
நடித்த
தனிப் பிறவி
(புதிய கொப்பி)

யாழ். வின்ஸர் மினி
தினசரி 10-30, 2-30
கார்த்திக்
அம்பிகா (இருவேடம்)
மேஜர் சுந்தரராஜன்
ராதாரவி. S. S. சந்திரன்
S. V. சேகர், வனிதா
நடித்த
பேய் வீடு
பயங்கரக் காட்சிகள் கொண்டது.

லதா மினி
(மகாண்டாவில்)
காலை 10-30 மாலை 3-30
கமலஹாசன் (இருவேடம்)
'கைதியின்டயறி'

ஸ்ராண்லி மினி
(சினிமா)
10-30, 2-15, 4-15
ரஜனி, அம்பிகா, ராதா
நடித்த
''எங்கேயோ
கேட்ட குரல்''
5'X5' திரையில்

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப 10-30 பி. ப. 2-00
M. G. R., K. R. விஜயா
தாழம்பூ

4-30 P. M.
I Spit on Your Grave
(கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்)

# "பேச்சுமூலம் தீர்வுகாண இன்றும் காலம் இருக்கிறது"

## 'தாயகம்' ஏடு வலியுறுத்துகிறது

[யாழ்ப்பாணம்]

''அரசு கூறிக்கொள்ளும் 'இந்தியத் தலையீடு' இன்றி இனப்பிரச்னைக்குத் தானே பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண இன்னும் காலம் போய்விடவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஐந்தாவது பிரிவையும் அரசியல் யாப்பில் 6-வது திருத்தச் சட்டத்தையும் வாபஸ் வாங்கியோ அல்லது நடமாட்டம் இல்லாது நிலைகொள்ளச் செய்வதுமூலமோ பேச்சுவார்த்தைகளுக்கான முன் ஏற்பாட்டை அரசு பூர்த்திசெய்யலாம்'' என 'தாயகம்' மே மாத ஏட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்தியாவின் தலையீடு எவ்வாறு உருவானது என்ற கேள்வியை எழுப்பி அதற்கான விரிவாக எடுத்தியம்பியுள்ள அத்தலையங்கம் ''இலங்கை அரசே பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு கண்டிருக்கவேண்டிய ஒரு உள்நாட்டுப் பிரச்னையை தட்டிக்கழித்து இந்தியாவின் தலையீட்டிற்குத் தானே வெற்றிலை வைத்துவிட்டு 'ஒப்பாரி வைப்பதில்' அர்த்தமில்லை'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் தேசப்பற்று மிக்க பிரமுகர்கள் ஸ்தாபனங்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தும்வகையில் முயற்சி எடுத்து பரந்துபட்ட மக்களது தேவைகளையும் விருப்புக்களையும் அறிந்து அதன் அடிப்படையில் சமுதாய பொருளாதார ரீதியாகப் பொருத்தமான முறையில் ஒன்றோ அல்லது மேற்படவோ சுயாட்சிப் பிரதேசங்கள் அமைத்துக்கொள்ள அரசு முன்வருவது மூலம் இன்றைய நிலையின் இனப்பிரச்னைக்கான தீர்வில் ஒரு பகுதியைப் பூர்த்திசெய்ய முடியும் எனத் தலையங்கம் வலியுறுத்தியுள்ளது.

# இப்படியும் நடக்கிறது

புரட்சி எத்தனை வகைப்படும்?

பசுமைப் புரட்சி, விவசாயப் புரட்சி, வெண்மைப் புரட்சி, தொழில் புரட்சி, கலைப்புரட்சி, ஆயுதப் புரட்சி, இரத்தப் புரட்சி, இரத்தம் சிந்தாப்புரட்சி, யுகப் புரட்சி... ...என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது நடப்பது 'மஞ்சள்' புரட்சி! மக்கள் ஆர்வத்துடன் பங்கு கொள்கிறார்கள்!

'ஊடுருவி'

# குருநகர் வீடுகள் இன்று கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடிக் கட்டட வீடுகள் நேற்று நடந்த நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இன்று வழங்கப்படும்.

இன்று காலை 9 மணிக்கு, 'லொத்தர்' மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான வீடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு காலை 10 மணிக்கு கையளிக்கப்படும்.

நேற்று மாலை 5 மணிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் பூர்த்தியானது. (க)

லொறி கடத்தப்பட்டது—

# சாரதி, கிளீனர் காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை ஏற்றிவந்த லொறி ஒன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் செல்லாமல் வேறுபாதை ஊடாக இந்த லொறிவந்ததாகக் கூறப்படுகிறது.

இனந்தெரியாதவர்கள் லொறியை மறித்து இந்த லொறியிலிருந்த சர்க்கரை, பம்பாய் வெங்காயம், பயறு, சோயா, பெருஞ்சீரகம் மற்றும் பாவனைப் பொருட்களை கொள்ளையடித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த லொறியின் சாரதிக்கும், கிளினருக்கும் என்ன நடந்ததென்று தெரியவில்லை எனக் கூறப்படுகிறது.

அனுராதபுர சம்பவத்திற்கு பின்னர் திருமலைக் கூடாகவே, கொழும்பு லொறிகள், யாழ்ப்பாணம் வருகின்றன. (க)

செட்டிக்குளம் பகுதியில் வாழும்—

# 5,550 விவசாயக் குடும்பங்களை வெளியேறும்படி உத்தரவு

(வவனியா)

செட்டிகுளம் பகுதியில் வாழும் குடிமக்களை அப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு ஒலிபெருக்கி மூலம் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டதாம்.

செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், ஆஸ்பத்திரி ஆகியவற்றையும் அப்புறப்படுத்தும்படி கேட்கப்பட்டதாம்.

இதனால் இப்பகுதியில் வாழும் சுமார் 5,550 குடும்பங்களைச் சேர்ந்த 27,012 பேர் பாதிக்கப்படக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

இதுதொடர்பாக செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் செல்வி எமில்டா வவனியா அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டதையடுத்து அவர் பகுதி ராணுவ உயர் அதிகாரிகளுடனும் கொழும்பில் அரச அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டுள்ளார்.

இப்பகுதியில் வாழ்பவர்கள் பெரும்பாலும் பரம்பரை விவசாயிகள் என்றும் இவர்களை வெளியேற்றுவதால் அவர்களின் விவசாயமும், வாழ்க்கையும் பாதிப்புக்குள்ளாகும் என்று உயர் அதிகாரிகளுக்கு அரச அதிபர் எடுத்துக் கூறியுள்ளார். இவர்களுக்கு மேலும் அவகாசம் அளிக்கும்படியும் அவர் கோரியிருப்பதாகத் தெரிகின்றது.

## பருளை சிவசுப்பிரமணியர் கொடியேற்றம்

[சுழிபுரம்]

சுழிபுரம்-பறுளை ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மகோற்சவம் இன்று காலை ஒன்பது மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

## தமிழ் மக்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து பேசுகையில்; அனுராதபுரம் சம்பவத்தைத் தொடர்ந்து மக்கள் காலையில் எழுந்தவுடன் நாட்டில் என்ன நடந்ததோ என்ற அச்சத்துடனும், பீதியுடனுமே வாழ்கின்றார்கள் என்றும்; இந்நிலையில் எமது எதிர்காலச் சந்ததியினரான இளைஞர்களை பலியிட முடியாது என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையை நீடிக்கவிடாது சர்வபலமும் கொண்ட இந்த அரசு, இருசாராருக்கும் பொருந்தக்கூடிய தீர்வு ஒன்றினை உடனடியாகக் காண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ரா)

## மாணவர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யர்களும் பாதிக்கப்பட்டிருப்பது பற்றி ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவிற்கு மகஜர் ஒன்று அனுப்புவதென்று இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

இம் மகஜரின் பிரதிகளை, கல்வி அமைச்சருக்கும், வடமாநில கல்விப் பணிப்பாளருக்கும்; யாழ். அரசாங்க அதிபருக்கும் அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இப்பிரச்னைகள் தொடர்பாக யாழ்.மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் வணசிங்காவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (க)

## ஒன்பது...

[ ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்பது கைதிகளும் திருட்டுச்சம்பவத்தில் ஈடுபட்டதற்காக சிறைத்தண்டனை அனுபவித்துவந்தவர்களாம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கோப்பாய் திறந்த வெளிச்சிறைச்சாலையில் உள்ள 8 கட்டடங்கள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டதால் முற்றாக சேதமடைந்தது தெரிந்ததே.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ். கோட்டைக்குள் உள்ள சிறைச்சாலைக் கட்டிடங்களை இராணுவத்தினர் தமது தேவைக்கு எடுத்துக்கொண்டதும், அங்கிருந்த சிறைச்சாலைக் கைதிகள் தென்பகுதிச்சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.

சிறைச்சாலையில் கடமையாற்றிய சுமார் 100 தமிழ் ஊழியர்களும், உத்தியோகத்தர்களும் கோப்பாய் திறந்த வெளிச்சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதுடன் தளபாடங்களும் கொண்டுசெல்லப்பட்டன. சிறைச்சாலை அதிபர், குருநகரிலுள்ள மாஜிஸ்டிரேட் பங்களாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்

திறந்தவெளிச் சிறைச்சாலை 35 ஏக்கர் நிலத்தில் அமைந்திருந்தது.

சீமைப்பன்றிகள், பசு மாடுகள், 200க்குமேற்பட்ட கோழிகள் அங்கிருந்த சிறைக் கைதிகளால் பராமரிக்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினமிரவு 10 சிறைச்சாலைப் பாதுகாவலர்கள் கடமையிலிருந்த பொழுது இனந்தெரியாத கோஷ்டியினர் துப்பாக்கிமுனையில் 9 கைதிகளையும் 10 உத்தியோகத்தர்களையும் தடுத்துவைத்துக்கொண்டு, கோழிகள், பசுமாடுகள், பன்றிகள் ஆகியவற்றை கட்டிடத்திலிருந்து அப்புறப்படுத்தி 8 கட்டிடங்களுக்கும் குண்டுகள் வைத்துத் தகர்த்துவிட்டனராம். இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

## மின்கம்ப மரணதண்டனை

(கரவெட்டி)

நெல்லியடிச் சந்தியில் மின்கம்பத்துடன் கட்டப்பட்ட சடலம் ஒன்று நேற்றுக் காலை காணப்பட்டது

தலைகீழாகக்கட்டி வைக்கப்பட்டிருந்த இச்சடலத்தில் ஒரு கடதாசி அட்டையும் தொங்கவிடப்பட்டிருந்தது.

போராளிகளைக் காட்டிக் கொடுத்ததற்காகவும், பெண்களை மானபங்கப்படுத்தியதற்காகவும் 'மரண தண்டனை' விதிக்கப்பட்டுள்ளது. 'தமிழ் ஈழவிடுதலைஇயக்கம்(ரெலோ)' என்று அந்த அட்டையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## சவூதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாகவும் இடைவழியில் காணாமல் போய்விட்டதாகவும் நேற்றுப் பகல் தெரிவிக்கப்பட்டது.

## நேற்று 1,300 பேர் கைது

[சென்னை]

இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவுகாட்டி திருநெல்வேலியில் கிளர்ச்சியில் ஈடுபட்ட 1,300 தி. மு. க தொண்டர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் சுமார் 195 தி மு க. தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. [ரா]

## குருநகர் தொடர்மாடி வீடுகள் வழங்கல்

குருநகர் தொடர்மாடி வீடுகள் வழங்குவதற்கென நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவினால் பின்வரும் இலக்கம் கொண்ட விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று வியாழக்கிழமை (23-5-85) காலை 9மணிக்கு அடையாள அட்டைகளுடன் தேசிய வீடமைப்பு அதிகாரசபை யாழ்ப்பாண அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டுமென்று மாவட்ட முகாமையாளர் திரு. த. பூ. முருகையா கேட்டுள்ளார்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01, | 04, | 05, | 08, | 10, | 11, | 12, | 13, |
| 21, | 22, | 23, | 36, | 38, | 39, | 41, | 49, |
| 52, | 55, | 56, | 59, | 64, | 66, | 67, | 69, |
| 70, | 71, | 80, | 81, | 85, | 87, | 92, | 95, |
| 100, | 105, | 113, | 115, | 129, | 135, | 138, | 141, |
| 146, | | 153, | | 163, | | 170, | 171, |
| 172, | 185, | 187, | 188, | 200, | 209, | 214, | 215, |
| 219, | 222, | 224, | 226, | 234, | 235, | 237, | 252, |
| 258, | 262, | 265, | 267, | 268, | 271, | 274, | 281, |
| 282, | 287, | 293, | 300, | 330. | 333, | 339, | 343, |
| 347, | 356, | 360, | 361, | 366, | 376, | 391, | 414, |
| 416, | 419, | 421, | 426, | 428, | 429, | 435, | 440, |
| 443, | 446, | 450, | 456, | 463, | 478, | 483, | 487, |
| 488, | 494, | 497, | 504, | 506, | 516, | 530, | 532, |
| 537, | 5 2, | 548, | 602, | 6 5, | 619, | 634, | 645, |
| 646, | 678, | 684, | 686, | 699, | 700, | 703, | 704, |
| 707, | 729, | 748, | 754, | 782, | 785, | 789, | 802, |
| 803, | 808, | 811, | 813, | 816, | 820, | L-3, | L-8, |

L-9.

(3397)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O, Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126